# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC-161 of 2025

## வழக்கு சாட்சி:PW-5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | நாகராஜ் | தேதி : | 10.02.2026 |
| தந்தை பெயர்: | கணபதி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரிஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 10.02.2026

**முதல் விசாரணை**

நான் மூன்றடைப்பில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என் முன்பாக போலிசார் எந்த விதமான பார்வை மகஜரோ வரைபடமோ வரையவில்லை. என்னிடம் காட்டடப்பபடும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு சம்மந்தமாக போலிசார் எதுவும் விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 18.03.2015 ம் தேதி 17 மணிக்கு நானும் எங்கள் ஊரை சார்ந்த சண்முகவேல் தேவர் மகன் முருகன் என்பவரும் மூன்றடைப்பு பஜாரில் உள்ள துரைக்காம்ளக்ஸ் அருகே நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு

வந்த நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் இருவர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதிலும் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பிறழ் சாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC-161 of 2025

## வழக்கு சாட்சி:PW-6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மெர்லின் செல்வ சோபாக் | தேதி : | 10.02.2026 |
| தந்தை பெயர்: | சாமுவேல் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரிஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 10.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கன்னியாக்குமரி மாவட்டம் ஆயுதப்படையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மூன்றடைப்பு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்த போது கடந்த 15.03.2015 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் பானான்குளம் ராணி ஹோட்டல் உரிமையாளர் கொம்பையா என்பவரை அடையாளம் தெரியாத நபர்கள் வெட்டி கொலை செய்த வழக்கு சம்மந்தமாக சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக 18.03.2015 ம் தேதி அன்று மாலை 4.30 மணியளவில் மூன்றடைப்பு பஜாரில் பாதுகாப்பு பணியில் இருந்த என்னுடன் பணிபுரிந்த SSI திரு ஸ்டீபன் மற்றும் மணிமுத்தாறு 9th பெட்டாலியன் காவலர் 752 திரு பாலசுப்பிரமணியன், காவலர் 759 திரு கனிராஜ் ஆகியோர்கள் பணியில் இருந்த போது பானான்குளம் சுடலைக்கண்ணு தேவர் மகன் முத்தையா, கொம்பையா தேவர் மகன் முத்து, ஊசக்காளி முருகன் ஆகிய மூன்று பேரும் TN 76 A 1585 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளில் வந்து மூன்றடைப்பு பஸ்ஸ்டாப் அருகே இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு கையில்

அரிவாளுடன் சுடலைக்கண்ணு தேவர் மகன் முத்தையா பணியில் இருந்த SSI திரு ஸ்டீபன் என்பவரை பார்த்து போலிஸ்கார நாய்களா தேவடியா பசங்களா எங்கள் ஜாதிகாரனை கொன்னவங்கள பிடிக்காம இங்க என்ன சுன்னியவா ஊம்புறீங்க எங்க ஜாதிகாரங்க பஸ்ஸ கல்ல கொண்டு எறிஞ்சதுக்கு ஓட ஓட விரட்டுறீங்க என்று கூறிவிட்டு கையில் இருந்த அரிவாளை எடுத்து SSI ஸ்டீபனை ஓங்கி வெட்டவும் அவர் சுதாரித்துக்கொண்டு இடது கையால் அதனை தடுக்க இடது கை ஆள்காட்டி விரல் மற்றும் கட்டை விரலுக்கு இடையே காயம் ஏற்பட்டது. மறுபடியும் அதே அரிவாளை எடுத்து எங்கள் ஜாதிகார பொம்பளைங்க நாடார்காரங்கள வெட்டி கொலை செய்யவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்ததற்கு கேசா போடுறீங்க இதோட செத்து தொலைந்து போங்கடா தாயோழிகளா என்று கூறி ஸ்டீபன் அவர்களின் தலையில் வெட்டவும் அந்த வெட்டு அவரின் தலையில் இடது பக்கம் பட்டு இரத்தம் காயம் ஏற்பட்டது. இதை அவருடன் பணியில் இருந்த சம்பவத்தை நேரில் பார்த்த பால சுப்பிரமணியன், கனிராஜ் ஆகியோர்கள் அவரை பிடிக்க முயன்ற போது கிட்ட வந்தா உங்களையும் வெட்டி கூறுபோட்டுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு மேற்படி பைக்கில் ஏறி அரிவாளுடன் தப்பி சென்று விட்டார். இதை காவல் நிலையத்தில் பணியில் இருந்த நான் கேள்விபட்டு மூன்றடைப்பு பிள்ளையார்கோவில் தெருவை சார்ந்த முப்பிடாதி என்பவரின் டிராக்ஸ் வண்டியில் ஏற்றி திருநெல்வேலி அரசு மருத்துவமணைக்கு மேற்படி சிகிச்சைக்காக அனுப்பிவைத்தேன். நான் சம்பவ இடத்திற்கு சென்று SSI ஸ்டீபனை பார்க்கும் போது அவரது இடது கை ஆள்காட்டி விரல், கட்டை விரலுக்கு இடையே வெட்டுக்காயமும், தலையின் இடது பக்கம் வெட்டுக்காயமும், இருந்தது. இது சம்மந்தமாக வட்ட ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை.